1992 மார்ச் 16]

234—

திண்டிவனம் நகரில் பல அடுக்கு வீடுகள்.

*2845 திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு வீட்டுவசதிமற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) திண்டிவனம் நகரில் வீட்டுவசதித் துறையால் பல அடுக்கு வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்குத் தேவையான நிலம் கையகப் படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை ;

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன்அனுமதி யோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் மற்றும் பல நகரங்களில் அரசு வேலை களில் இருப்பவர்களுக்கும், பொது மக்களுக்கும் வீடு கிடைக்கா மல் மிகவும் கஷ்டப்படுவதை அரசு அறியுமா ? உடன் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நிலங்களைக் கையகப்படுத்தி அடுக்கு மாடி வீடுகள் கட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை திண்டிவனம் நகரில் 120 அடுக்கு மாடி குடியிருப்புகள் தமிழ்நாடு அரசு வாடகை வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திண்டிவனம் நகரில் வீடு கட்டுவதற்கு தேவையை நிர்ணயிக்கின்ற விளம்பரம் ஒன்று செய்யப்பட்டது. அந்த விளம்பரத்தின் அடிப்படையில் மொத் தமே 24 மனுக்கள் மட்டும் தான் பதிவு செய்திருக்கிறார்கள். விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இங்கு வீட்டுவசதி வாரியத்தால் திட்டம் நிறைவேற்ற இயலாது

என்று கருதப்பெற்று திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. வீடு கள் தேவையானவர்கள் பதிவு செய்யும் பட்சத்தில், வீட்டுத் தேவை அதிகம் இருக்கின்ற வகையில் விண்ணப்பங்கள் பெறு கின்ற பட்சத்தில் நிச்சயமாக இந்தத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்களை கையகப்படுத்துகின்றபோது தனியார் காலி நிலங்களாக இருந்தாலும், பழைய கட்டிடங்களை இடித்து கட்டுவதாக இருந்தாலும் அதையெல்லாம் ஹவுசிங் போர்டு மூலம் தான் அரசு எடுக்கவேண்டுமென்று ஏதாவது ஒரு தனித் திட்டம் இருக்கிறதா ? அப்படி ஹவுசிங் போர்டு எடுக்காவிட்டால் ரியல் எஸ்டேட்டுகாரர்கள் அதை கையகப்படுத்தி, தனியார் களின் பழைய கட்டிடங்களை வாங்கி அதிக விலைக்கு பல்வேறு நகரங்களில் இப்போது கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார் கள். அதன் விலை அரசின் விலையை விட 2, 3 மடங்கு அதிகமாக இருப்பதால் தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தி குறைந்த விலையில் பல்வேறு நகரங்களில் வழங்க, எல்லா மக்களுக்கும் வீடு கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களை இது சம்பந்தமாக தனிக் கேள்வி போடுமாறு அறிவுறுத்து கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 235, திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை.

236 திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

236—

ஆதிதிராவிட மக்களுக்கு திருமண மண்டபம்.

*4730 திரு. சிங்கை கோவிந்தராசு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிட மக்களுக்கு ஒவ்வொரு தொகுதியிலும் திருமண மண்டபம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

TRUTH ALONE TRIUMPHS